Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

(1889)

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம்

[புத் - சூஅ] பார்ப்பானம்:- துன்முகி வரு ஆனி மீ உ௨ வெள்ளிக்கிழமை (15 JUNE 1956) [இல -

# அரசர்க்கமைவது நீதி நெறி

## அழிவுக்கு ஏது மறம்

வீரமகேந்திர அரசன், வீறுடன் கொலுவீற்றிருக்கிறான். மேனகை, திலோத்தமை உருப்பசி முதலாகச் சொல்லப்பட்ட தேவமாதர்கள் கவரிவீசுகிறார்கள். கின்னரர், சித்தர், இயக்கர் ஆதியோர் வீணை முதலிய வாத்தியங்களை இசைக்கின்றார்கள். இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப அரம்பையர் ஆடுகிறார்கள். பாவங்களையே நினைத்து அவற்றையே செய்யும் படியாக ஏவுகின்றனர் மந்திரிகள்; அவர்களின் ஏவலைச் செய்து முடிக்கக் காத்து நிற்கின்றனர் ஏவலாளர்கள்.

இங்கே உள்ள மந்திரிகள் மந்திரிகளாயிருக்கத் தகுதி யற்றவர்கள். அரசன் தான் அறிவில்லாமையால் தவறான வழியிற் சென்றாலும் உண்மையைக் கூறித் திருத்துதல் அமைச்சரின் கடனென வள்ளுவர் கூறுகிறார். இவ்விடத்திலோ கொடுமை பொருந்தியவனுகிய சூரனின் எண்ணப்படியே மந்திரிகள் ஒழுகினர். கையிலே பிரம்பு தாங்கிச் சபையை ஒழுங்கு செய்கின்ற இவர்களோ, இறைவனைப்பற்றிக் கொஞ்சமேனும் நினைவு கொள்ளாதவர்கள்.

ஒரு பெரிய சிம்மாசனத்தின்மேலே சூரபன்மன் வீற்றிருக்கிறான். அவனுடைய நிறம் கறுப்பு. அவனுடைய தலையின்கண்ணே பவுனால் செய்யப்பட்ட ஒளி பொருந்திய கிரீடம் இருக்கின்றது. உதயகிரியின் கண்ணே காலையில் உதிக்கும் சூரியனைப் பார்ப்பது போன்றிருக்கின்றது அந்தத் தோற்றம். கிரகண காலங்களிலே இராகு கேது ஆகிய சர்ப்பங்கள் சூரிய சந்திரரை மறைப்பதாகத் தமிழர் உருவகப்படுத்துவர். இது வெறும் உருவகமே. உண்மையை விளங்காமல் அவர்கள் கூறவில்லை. "மருவு பூமியின் சாயையே ராகு கேதுக்களாம்" என்ற சோதிடப்பாட்டு இதைத் தெற்றென விளக்கும். இராகு எனனும் கறுத்த நிறமுடைய பாம்பானது தனியே இருக்கும்போது இருசூரியர்கள் சந்தித்து விடுகிறார்கள். உடனே தங்கள் பகையைத் தீர்த்துக் கொள்வதற்காக இராகுவை இருபக்கமும் போய்க் கவ்விக் கொள்ளுகிறார்கள். இவ்வாறு இருக்கிறது சூரபன்மனது முகத்திற்கு இருபக்கமும் காதுகளில் அணியப்பட்ட குண்டலங்கள்.

தோளிலே அங்க வஸ்திரம், மேலே சட்டை, மார்பிலே மணி மாலைகளுடன் கலந்து விளங்கும் மலர்

**ஸ்ரீ வ. குகசர்மா**

மாலைகள், கைகளில் கடகம், கால்களிலே வீரக்கழல் இவ்வாறு சூரபன்மன் சபையில் வீற்றிருக்கும் காட்சி வீரவாகு தேவரின் கண்களுக்கு ஒருவிருந்தாக அமைகிறது. ஒரு கணம் மகிழ்ச்சியடைகிறார்; மறுகணம் அவர் மனதைக் கவலை கவ்விக் கொள்ளுகிறது. இவ்வளவு செல்வங்களுடன் கூட இச்சூரபன் மனும் அழிந்து போகப் போகின்றானே எனக் கருதுகிறார். அவருக்கு ஒரு கதையும் ஞாபகம் வருகிறது.

ஒரு பறவை கூடுகட்டி வாழ்ந்து வந்தது. இரவில் வெளிச்சத்திற்காக மின்மினிப் பூச்சியைப் பிடித்துக்கொண்டு வந்து கூட்டிற்குள் விடும். ஏனைய பறவைகள் ஒன்றும் அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. அதற்குப் பெருமை தாங்கவில்லை. ஒருநாள் மின்மினிப் பூச்சிக்காகத் தேடித் திரிந்தது. இருட்டிவிட்டது. இருட்டில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. அது மின்மினியின் வெளிச்சம்போல் மின்னியது. ஆனல் அது ஒரு சிறு நெருப்புக் கொள்ளி. அதைக் குருவி அறியவில்லை. மின்மினி என நினைத்து கூட்டிற் கொண்டுபோய் வைத்தது. கூடும் குருவியும் எரிந்து சாம்பலாயின. தேவர்களுக்குத் துன்பம் செய்யலாமா? அவர்கள் நெருப்புப் பொறிக்குச் சமனல்லவா எனக் கருதுகிறார் வீரவாகுதேவர்,

"மெய்ச்சோதி தங்குசிறு
கொள்ளிதன்னை விரகி [ன்மை
கொண்ட குருகார்
கச்சோத மென்று கருதிக்
குடம்பைதனில் உய்த்து
மாண்டகதைபோல்
அச்சோவெனப் பலிமை [யோரை
யீண்டு சிறைவைத்த
பாவமதனல்
இச்சூரபன்மன்
முடிவெய்து நாளை
இதனுக்கோரைய
மிலையே"

நீதியால் உலகளிப்பதே அரசர் நெறி. நீதிதவறின் அது அழிவில் முடியும்



# அமைதியின்மைக்கு யார் பொறுப்பாளிகள்

—:0:—

## மக்களுக்குப்போதியபாதுகாப்புமுறை அரசாங்கம் வகுத்திருக்கின்றதா?

பெருவாரியாகக் கலகம் இல்லையென்றாலும் மூலை முடுக்குகளிற் குறும்புத்தனம் தலைகாட்டிக்கொண்டே வருவதால் வ...ட்புவாத விபரீதம் வளர்ந்து வருகின்றது. இதற்கு யார் பொறுப்பாளிகள்?

அரசாங்கம் நாட்டிலுள்ள எல்லா மக்களின் பாதுகாப்பை நடத்தும் பொறுப்பை முக்கியமாக ஏற்றிருக்கின்றது. இந்தச் சூழலிலே தனிச்சிங்களச் சட்டத்துக்காகத் தலைவிரித்தாடு... வகுப்புவாதிகளின் வாயையும் அவயவங்களையும் எவ்வாறு ... தமரும் மந்திரிமாரும் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்?

மட்டக்களப்பிலே திரிகோணமலையிலே மற்றும் இடங்களிலே அபாயகரமான செயல்களும் துப்பாக்கிச் சூட்டாற் படுகொலைகளும் நடந்திருக்கின்றன என்று அரசாங்கம் அறிந்தும் இன்னமும் விசாரணையை முறைப்படி நடத்தி முடிவு சொல்லாதிருப்பதெதற்காக.

உதவி மந்திரியார் திரு. கே. எம். பி. இராசரத்தினவின் பெயர் எல்லாக் கலவரங்களிலும் சேர்ந்து அடிபட்டு வருவதைத் திரு. பண்டாரநாயக அறிந்தும் அவருக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கா திருக்கின்றார். இதுவா அமைதியை நிலை நாட்ட எடுக்கும் முயற்சி?

பாரத நாட்டுத் தலைவர்களும் தனிச் சிங்களச் சட்டத்துக்கு ஆதரவு கொடுக்கின்றார்கள் என்ற வகையில் திரு. இராசரத்தின ஆச்சாரிய கிருபாலினியின் வாயில் இல்லாதது பொல்லாதது ஆகியவற்றை எல்லாம் புகுத்திப் பத்திரிகைகளிற் பரபரப்பை உண்டு பண்ணியிருந்தா ரல்லவா? இப்பொழுது அந்த ஆச்சாரிய கிருபாலினி அவர்களே நாம் ஒன்றும் அறியோம் என்று கூறுகின்றார். இதுதான அமைதியைக் கொண்டுவர அமைச்சர்கள் எடுத்திருக்கும் வழிவகை.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# சுதந்திரத்துக்கு வேண்டுவதுஉணவுப்பொருள்

## வன்னிப் பகுதியில் கமம் செய்ய வேண்டிய அவசியம்

**திரு. நா. சேனுதிராசா**
யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்

உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்றபடி, உலகிலுள்ள சீவராசிகட்கு உணவுகொடுப்பவர்கள் நிலத்தை உழுது பயிரிடும் கமக்காரராவார். பூமியிலிருந்தே நெல், கோதுமை, காய்கறி வகைகள், கிழங்கு வகைகள் பழவகைகளான எல்லா உணவுப் பொருள்களையும் எடுத்து மானிடர்கள்உண்கிறார்கள். கமச் செய்கையிலுண்டாகும் பொருட்களெல்லாம், தண்ணீரால் விளைகின்றன. தண்ணீரை, மழை மூலமாயும், ஆறுகள் குளங்கள் மூலமாயும் பெறுகின்றோம். வானம் பார்த்த பூமிக்கு மழைதான் பிரதானம். மழை இல்லாவிட்டால் விளைவு ஏற்படாது. "விண்நின்று பொய்ப்பின், விரிநீர் வியனுலகத்துள் நின்றுடற்றும் பசி" என்றும் சொன்னர் நாயனர். பூமியிலுள்ள சீவராசிகளின் சீவியம் மேலுலகமாகிய விசும்பில்தங்கிநிற்கின்றது. மழை, முறையாய் வருஷிப்பது, நாம் கடவுளருக்கும், சீவகோடிகட்கும் செய்யும் பணியில்தான் தங்கியிருக்கின்றது. புண்ணியச் செயல் செய்தால் குளிர்ச்சியான மழையைக் காணலாம். பாவச் செயல் செய்தால், கொடிய நெருப்பு மழை தான் பெய்யும். நெருப்பு மழை பெய்தால் பசி ஏற்பட்டு உடல் மெலிந்து சீவன்கள் மடியும். கமச் செய்கைக்குத் தண்ணீர் மாத்திரமல்ல, கால்நடைகளான மாடு ஆடுகளும் முக்கியமாக வேண்டும். ஏனெனில் நிலத்தைஉழுது பண்படுத்த பசளை கொடுத்துப் பயிரை ஓங்கி வளரச் செய்ய எருத் தர, மானிடரை வளர்க்கும் பாலைத் தரப் பசுக்களும், கசநோயைக்கூட வெட்டக்கூடிய ஆட்டுப் பாலைத் தர ஆடுகளும் இன்றியமையாதன. இந்தக் கால்நடைகளே, கமச் செய்கைக்கு மூல காரணமானவை. பசுப்பால், ஆட்டுப் பாலே இப்பூவுலகிலுள்ள அமிர்தம். கால் நடைகளை நல்ல சத்துள்ள உணவு கொடுத்து வளர்க்கவேண்டும். ஈழநாட்டிலுள்ள தமிழ் நாட்டில் மழைகுறைவு. தண்ணீர்ப் பஞ்சம் அதிகம். எப்படியாவது உபாயமாய், கால் நடைகளின் தீன் சாமான்களைப் பூமியில் வைத்து உண்டாக்கி வளர்த்தல் வேண்டும். கால் நடைகள் இல்லையேல் மானிடர் சீவிக்கமுடியாது. இலங்கையில் வாழும் மக்கள் 90 சதவிகிதம் கமக்காரர்கள். இலங்கையின் இயற்கை அமைப்பும் கமச் செய்கைக்கு உரிய பூமியாய் கடவுளால் அமைக்கப் பெற்றிருக்கின்றது. எங்கள் முன்னேர் கமச் செய்கையில் ஈடுபட்டு உழைத்தார்கள். நெல் அரிசி எல்லாம் பிறதேசங்கட்கு அனுப்பினர்கள் என்று சரித்திரம் கூறுகின்றது. இதுவரையில் நாம் கமச் செய்கையில் ஊக்கமில்லாது அன்னிய தேசத்துப் பொருட்களை ஏராளமான பணத்தைக் கொடுத்துப் பெற்றுச் சீவித்தோம். அதனல் எங்கள் சொந்த நிலங்களெல்லாம் பாழாய்க் கிடந்தன. கோடிக்கணக்கான ரூபாவும் இந்த நாட்டை விட்டுப் பிற நாடுகட்குச்சென்றது. கை வறளத் தொடங்கிவிட்டது. முன் மலேயாவிலிருந்தும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்.

...ந்தணர்வானவர்ஆனினம்
...க தண்புனல் வேந்தனுமோங் [குக
...தீயதெல்லாம்அர னாமமே
...க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# ...ந்துசாதனம்

...ாழ். துர்முகி௵ ஆனி மீ
உ வ வெள்ளிக்கிழமை


## ஆட்சி ஒழுங்கு எங்கே? ஒதுங்கிவிட்டது

...அஞ்ச வேண்டாம், அப...ந் தருகின்றேன் என்று ...டிக்கடி பேசுகின்றார் ...ரதமர். ஆனால் நாட்டிற் ...ழப்பங்கள் குறைந்துவிட...ல்லை. பொதுசனங்கள் ...து செய்வது என்று அறி...ாது அலமந்து கலங்கு...ன்றார்கள். தமிழ் பேசும் ...க்கள் நாட்டுப்புறங்களிலே ...ழமையான வகையில் ...ாழ்க்கை நடத்த முடியாது ...டுமோ என்று எண்ணக் ...டியவாறு கயவர்களும் ...காள்ளைக்கூட்டத்தினரும் ...மாடுகின்றனர். பாடிகா...லர்கள் பாதுகாப்பார்கள் ...ன்பது சொல்லளவில் ...ருக்கின்றதேயன்றிச் ...சயலில் நடைபெறுகின்ற...ல்லை என்று ஊரவர்கள் ...ணைக்கவேண்டிய நிலைமை ...ழுந்துவிட்டது.

அம்பாறையிலும் மட்டக்...ளப்பிலும் திருக்கோண...லையிலும் அல்லது அந்...க் கொடிய ஆனி ஐந்...ாம் நாள் அட்டூழியம் ...டந்த கொழும்பு மாநகரி...லும் சுற்றுப் புறங்களிலும் ...சிக்கின்றவர்கள் அரசு ...ஒழுங்கில் நம்பிக்கை வைப்...பதற்கு என்ன நடைமுறை...யை அமைச்சர்கள் கை...யாண்டிருக்கின்றார்கள். ...நெறிகெட்ட முறையில் ...டந்துகொண்ட கொள்...ளக் கூட்டத்தாரையும் ...தழப்பக்காரர்களையும் தண்...டிக்கும் நோக்கமாக அர...சாங்க விசாரணை ஏற்படுத்...தப்பட்டிருக்கின்றதா? இல்லை. இது மிகவும் வெறு...க்கப்படத் தக்க விசனிக்...கக்கூடிய பெருந் தவறு ...என்பதைத் திரு. பண்டார...நாயக ஒரு சிறிதும் உணர...வில்லையென்றே நாம் எடு...த்துக் காட்டுகின்றோம். ஒரு நாட்டிலே குழப்பம் ஏற்பட்டு ஊரவர்கள் அநீதி...யாக அடாத்தாகத் துன்பு...றுத்தப்பட்டால் அங்குள்ள அரசாங்கம் உடனடியாக விசாரணை செய்து பழி செய்த பாதகர்களைத் தண்...டித்து நீதியை நிலைநாட்டு...வதுதான் மனித முறையும் அரசஒழுங்குமாகும். இவை இரண்டும் இல்லாமல் இருக்கின்றது இலங்கை இப்பொழுது என்பதை எவ...ரும் மறுக்கமாட்டார். முதல் அமைச்சர் மொழிச் சட்டத்தை எந்த வகையி...லும் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டாற் போதும் என்று எண்ணுகின்றாரே...யன்றி மக்கள் மத்தியில் அமைதி நிலவுவதற்கு ஆவன செய்கின்றாரில்லை. அச்சம் எவ்வாறு அகன்று விடும். பேச்சினாற் பிரசங்கத்தினால் அமைதியை உண்டுபண்ணுதல் முடியாது. பாடிகாவலர் பாதுகாப்பு முறைக்குத் தக்கவர்களாய் இல்லாவிட்டால் வேறுவிதமான ஒழுங்குகளை அரசாங்கம் உடனே செய்தல்வேண்டும். அமைதியற்ற நிலைமை இல்லை இங்கே என்று பிரதமர் பண்டாரநாயக சொல்லிவிட்டால் மற்றவர்கள் நம்பிவிடமாட்டார்கள். அமைதி குலைந்துபோய்விட்டதென்ற உண்மையை ஒப்புக்கொண்டு தனிச் சிங்களச்சட்ட விவாதத்தை ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டின் நலன் கருதி அமைதியை உண்டு பண்ணுவதற்கு அவர் இந்தக் கணமே எழுதல்வேண்டும். இல்லையேல் அரசு நடத்த முடியாத ஆற்றாமையை நாணமின்றி வெளிப்படுத்தி அரசியல் அரங்கில் இருந்து அகன்றுவிடுதல் வேண்டும்,

❁

### யார் சொல்லியும் கேட்கமாட்டார்கள்!

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் அத்தனையாலும் தனிச்சிங்களச் சட்டம் வகுக்கும் அமைச்சர்கள் புத்தி புலப்படும் நிலையை அடையமாட்டார்கள் போலும். ஆட்சியியல் அமைச்சியலுக்கு அணுவளவேனும் உடம்பாடில்லாததாய் எக்காலத்திலும் எந்நாட்டிலும் இயற்றப்படாததாய், உண்மை ஒழுக்க நெறிக்கு ஒரு சிறிதும் ஒப்புப்கொள்ளப் படாததாய், எல்லாவற்றிலும் கீழாக உலகியலுக்கும் மனிதச் சால்புக்கும் மாபாதகத்தை இயற்றுவதாய் உருவெடுத்திருக்கும் இச்சட்டத்தை ஏற்கும் பாராளுமன்றத்தவர்கள் ஊழூழிகாலமும் இனத் துரோக மொழிப் பழிக்கு ஆளாவார்கள் என்பதற்கையமின்று

ஆட்சிமுறை ஒருபாலுங் கோடாததாக இயங்குதற்கு அமைச்சர்கள் அகத் தூய்மை உடையவர்களாய் மனிதநெறியை நன்கறிந்தவர்களாய் உண்மையை ஒரு பொழுதும் மறவாதவர்களாய் இருத்தல் வேண்டும் என்பதை மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியாருக்கு எடுத்து இடித்துரைத்தல் அறிஞர்கள் கடனாகின்றது.

பொதுத் தேர்தலிலே வெற்றி பெறுவதற்குப் போலி வேடந் தாங்கியவர்கள் அரசு நடத்தும்போது அந்தவிதமாக நடந்துகொள்வது நீதியாகாது, சனநாயக நெறியாகாது. அந்நியர் ஆட்சியை அகற்றுவதற்கு அண்ணன் தம்பி என்ற முறையில் இந்நாட்டு மக்கள் யாவரும் ஒருங்கு கூடினமையாலன்றோ ஆங்கிலேயர்கள் வந்த வழியே செல்ல நேரிட்டது. மூன்றும் ஆள் மூடைகட்டிக் கொண்டு புறத்துப் போன பின்பு ஆட் பலத்தாலே

## தனிச் சிங்களம்பற்றி இந்திய பத்திரிகைகள்

———o———

தனிச் சிங்களச் சட்டம் பற்றியும் தமிழ் மக்களின் எதிர்ப்புப்பற்றியும் இந்தியப் பத்திரிகைகள் பலவாறு கூறுகின்றன. அவற்றுள் இரு ஆங்கிலப் பத்திரிகைக் கூற்றுக்களில் ஒவ்வொரு சிறுச்சிறுப் பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

### மதராஸ் ஹிந்து

இலங்கைப் பாராளுமன்றம் தனிச் சிங்களச் சட்டதிட்டத்தின்கீழ் வாதம்நடத்தத் தொடங்கியிருக்கின்றது. அது சட்டமாக்கப்படும் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால் அது இத்தொடர்பில் ஓர் அந்தமாக மாட்டாது. பொதுவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்ட சாத்துவிக வேலை நிறுத்தம் (ஹர்தால்) கொழும்பில் செய்யப்பெற்ற சத்தியாக்கிரகம்; தங்கள் தாய் மொழியாகிய தமிள் மொழிக்குச் சமத்துவம் கொடாமைபற்றித் தமிழ் மக்கள் எவ்வளவு ஆழமாக வருந்துகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. தனிச் சிங்களத் தீவிரவாதிகளும் உணர்ச்சியைப் பெருக்கியதனால் கொழும்புமாநகரம் மிருகத்தனத்துக்கு இடங் கொடுத்து நின்றது; அதிலே தாக்கப்பட்டோர் பெரும்பாலும் தமிழ் மக்களே யாவர்.

### "த டைம்ஸ் ஒப் இந்தியா'

தமிழ் மக்களின் கிளர்ச்சியாலும் சிங்கள மக்களின் எதிர்க் கிளர்ச்சியாலும் கொழும்பில் உண்டாக்கப்பட்ட தீவிர குழப்ப நிலைமைக்கு இலங்கை அரசாங்கம் தாம் பொறுப்பல்ல என்று சொல்ல முடியாது. அதிதீவிர சாதி உணர்ச்சியை உண்டு பண்ணும் என்று முன்னரே அவர்கள் அறிந்திருக்கவேண்டிய தனிச் சிங்களச் சட்டத்தினால் எரிகின்ற வாக்குவாதத்திக்கு விறகிட்டுவிட்டார்கள். முந்திய முதல் மந்திரியின் முரண்பட்ட கூற்றுக்களினால் ஸ்ரீ பண்டாரநாயக சொல்லுகிறபடி தமிழ் சிங்கள மக்களாகிய இரு சாராரினதும் உணர்ச்சி பெருக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்த உணர்ச்சி வேகத்தைத் தடுப்பதற்குத் தமது அரசாங்கமும் கட்சியும் எதுவாயினும் செய்திருப்பதாகச் சொல்லமுடியாது. தனிச் சிங்களமே அரச கருமமொழியாக்கப்படும் என்பது சிங்கள மக்கள் முன்னணி தேர்தற் காலத்திற் கூறிய உறுதிமொழி ஆயது உண்மைதான். சிங்கள மக்கள் எவ்வாறு தனிச் சிங்களத்துக்கு வாக்களித்தார்களோ அவ்வாறே தமிழ் மக்கள் சமஉரிமைக்கு வாக்களித்தார்கள் என்பதை ஸ்ரீ பண்டாரநாயகவும் அவருடைய கட்சியும் மறக்கக் கூடாது,

———

தனிஅரசு நடத்தத் துணிந்து முன் கொடுத்த சகோதர பான்மை உறுதி மொழிகளைக் காற்றிலே வீசிவிட்டு அகம்பாவம் கொண்டிருக்கும் சிங்களத் தலைவர்கள் இப்பொழுது இரட்டுற மொழிந்து வாக்குப் பண்ணுவதைத் தமிழ்ப்பேசும் இனம் ஏற்றுக கொள்ளமாட்டாது. அவ்வாறு ஒரு சமரச ஒற்றுமை முடிவு செய்தல் வேண்டுமேயாயின் முதல் அமைச்சர் சிங்களச் சட்ட விவாதத்தைப் பாராளுமன்றத்திலே ஒதுக்கி வைத்துவிட்டுச் சினேக பான்மையிலே தலைவர்கள் மாநாடு கூட்டி தன்மையாகத் தண்ணளியாக அளவளாவி ஆராய்ந்து நல்ல வண்ணம் நாடு முன்னேறுவதற்கு வழிகளைவகுத்தல் அத்தியாவசியம்.

பாராளுமன்றத்தில்-

## நியாயத்துக்குமேல் நியாயம் காட்டியும் பயனில்லை

———o———

## தமிழ் இனத்தின் ஏகோபித்த எதிர்ப்பு

தனிச்சிங்களச் சட்டத்தை திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் எதிர்த்துப் பேசும்போது தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்க்கும் இலங்கைத் தமிழரின் உரிமைப் போராட்டம் உரிய வேகத்துடன் இன்னும் தொடங்கவில்லை. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் நோக்கத்துடன் சிங்களமொழி பலாத்காரமாகத் திணிக்கப்பட்டால் தமிழ்மக்கள் அதை இறுதி வரையும் முழுமூச்சுடன் எதிர்ப்பார்கள் இந்த அரசாங்கம் தமிழ்ச் சமுகத்தை அடிமைப்படுத்தித் தமது மொழியைத் திணிக்கும் நோக்கத்துடன்தான் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றது.

ஒரு சில சலுகைகளுக்காகத தமிழ் மக்கள் தங்கள் புதிய எசமான்களுக்கு என்றென்றும் அடி பணிந்தே வாழவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இச்சட்டத்தின் வாசகங்கள் நன்கு தெளிவுபடுத்திவிட்டன தமிழன் அடிமையாக வாழ்ந்ததில்லை. இனி வாழப்போவதுமில்லை என்று கூறினார்.

ஸ்ரீ. எம். ஈ. எச் முகமது அலி பேசும்போது புத்த ஜயந்தி கொண்டாடும் இக்காலத்தில் ஒரு பிரிவு மக்கள் மீது அநீதிவிளைக்க அரசாங்கம் முயற்சிப்பது மிக வருந்த வேண்டியதாகும. தன் மானமுள்ள தமிழன் எவனும் இதை ஏற்கமாட்டான் என்றார்.

திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் பேசும்போது இலங்கையின் இரு கண்களான தமிழும் சிங்களமும் அரசகரும மொழிகளாய் இருக்குமென்று காலத்துக்குக்காலம் உறுதியளிக்கப்பட்டுவந்தது. அப்படியிருக்க இன்று செய்யப்படுவது ஒரு அரசியற் கொள்ளையே தவிர வேறொன்றுமல்ல என்றார்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது தனிச் சிங்களச்சட்டத் தொடர்பில் தமிழ்மக்களை ஒத்துழைக்கும்படி கேட்பது ஓநாயுடன் ஆட்டுக் குட்டியை ஒத்துழைக்கும்படி கேட்பதை ஒக்கும் என்றார்.

ஸ்ரீ எம். எம். முஸ்தபா பேசும்போது சிங்களத்தை மாத்திரம் தேசிய மொழியாக்குவோம் என்ற வாக்குறுதியில் இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது என்கிறார்கள். இப்பாராளுமன்றத்தைக் குலைத்துவிட்டுத் தமிழ் மக்களை ஒழிக்க வேண்டும் என்னும் கொள்கையில் போட்டியிட்டால் இந்த அரசாங்கம் மறுபடியும் அதிகாரத்துக்கு வருமென்றே நான் நினைக்கின்றேன் என்று கூறினார்.

தமிழ் மொழி ஒழிந்தபின் தமிழருக்கு வாழ்வு ஏது? தனிச்சிங்களச் சட்டம் சனநாயகத்தை வேரோடு அறுத்தெறிகின்றது என்று திரு. என். ஆர். இராசவரோதயமும், தனிச் சிங்களச் சட்டத்தையும் குறிப்பாக ஆனி 5ம் உ நிகழ்ச்சிகளைக் கண்டித்து திரு. வி. என். நவரத்தினமும் உண்ணாவிரதமிருந்த பேராசிரியருக்குப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்திற் பேச இடங் கொடுத்தமை அவர் விருப்பப்படி சட்டம் திருத்தப்பட்டமை உதவி மந்திரி ஒருவர் அயல்நாட்டுக்கு அரசியல் நிலைமைபற்றி அடாத செய்தி அனுப்பிய செயல் முதலியவைபற்றி திரு. வன்னியசிங்கமும் தனிச் சிங்களக் கொள்கை பற்றி திரு. பி. கந்தையாவும் கண்டித்துப் பேசினார்கள்.

———

# சைவக் காவியம் தந்த தெய்வச் சேக்கிழார்

## சீர்பெற்று வாழச் சரிதையைச் சிந்திப்போம்

——0—0——

### ( சேக்கிழார் குருபூசை 12—6—56)

சைவ மக்களின் தனிப் பெருங் காவியங்களில் ஒன்றான பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார் சுவாமிகளாகும். ஆம் பெரிய புராணம் என்று கூறுவது இந்நூலுக்கு முற்றும் பொருந்தும். சேக்கிழார் பெருமானுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இப்படியொரு சிறந்த காவியத்தை யாரும் இயற்றியதாகத் தெரியவில்லை. நமது தமிழ் நாட்டுப் பண்பாட்டையும் நாகரீகத்தின் உன்னத நிலையையும் அறிய வேண்டுமானல் பெரியபுராணம் போன்ற நூல்களைத் துருவித் துருவி ஆராயவேண்டும். தமிழகத்தின் சரித்திரத்தில் இருண்ட காலத்தில் பெருமுயற்சியெடுத்து பல வரலாற்றுக் குறிப்புக்களையும் நமக்குத் தந்த அருட் புலவரை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது. சேக்கிழார் பல அரசர்களதும் அடியார்களதும் சரித்திரக் குறிப்புக்கள் தந்திராவிட்டால் நமக்கு இன்று அவைகளை அறியும் பாக்கியம் எப்படி வரும்?

### தோற்றம்

தொண்டை நாட்டிலே, புலியூர்க் கோட்டத்திலே குன்றத்தூரிலே அவதரித்தார் நம் புலவர் சிகாமணி சேக்கிழார். குன்றத்தூர் சென்னையிலிருந்து பதினறு கல் தூரத்திலிருக்கின்றது. குன்றத்தூரைத் திருநாகேஸ்வரம் என்னும் சிவஸ்தலம் சிறப்பிக்கின்றது. குன்றத்தூர் வேளாண்மைக்குப் பேர் போனது. அங்கு பயிர்த்தொழில் செய்யும் அனேக குடிகள் இருந்தனர். இக்குடிகளுள்ளும் கூடல் கிழான், புரிசைக் கிழான், சேக்கிழான் எனப் பல மரபினர் இருந்தனர். 'சே" என்பது காளையைக் குறிக்கும். எனவே காளை எருதைக் கொண்டு உழுது பயிரிடும் வேளாளருக்கு அமைந்ததாகலாம். நமது சேக்கிழாரும் இந்த வேளாள மரபிலே அவதரித்தனர். சேக்கிழார் மரபினர் பழுத்த சிவபக்தர்கள். இவர்கள் சோழ மன்னர்களிட மிருந்து பட்டங்களையும் சிறப்பு விருதுகளையும் பெற்று நன்கு மதிக்கப்பட்டனர்.

### அமைச்சராதல்

நம் சேக்கிழார் பெருமானின் இயற்பெயர் அருள் மொழித்தேவன். கல்வெட்டுகளில் இவரது இயற்பெயர் இராமதேவன் என்றும் குறிக்கப்பெற்றிருக்கின்றது. இவர் சிவபத்தியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர். நல்லாசிரியர் ஒருவரிடம் பல தமிழ் நூல்களையும் கற்றுத் தேறிச் சங்க இலக்கியங்கள் முதல் சைவசமய நூல்கள் சமண—பெளத்த நூல்கள் வரை பல நூல்களையும் பழுதறக் கற்ருர். இவரது புலமையையும் அறிவின் ஆற்றலையும், ஒழுக்கத்தின் சீலத்தையும் கேள்வியுற்ற அரசன் அநபாயசோழன் இவரைத் தமது முதலமைச்சராக அமர்த்தினன். இவ்விடத்தில் அரிமர்த்தன பாண்டியன் வாதவூரடிகளை அமைச்சராக அமர்த்தியதை நினைவுகூர்தல் வேண்டும். தமிழ்ப் பண்பாட்டிலும் சைவசமய வளர்ச்சியிலும் பற்றுக்கொண்ட அநபாய சோழன் பல்கலை விற்பன்னராகி விளங்கிய, சைவ சீலராகத் திகழ்ந்த சேக்கிழாரைத் தெரிந்தெடுத்தது மிகவும் பொருத்தமானதல்லவா?

**திரு. வெ. சு. நடராசா**
அரசாங்க பிரசுர நிலையம்
கொழும்பு

### சகல மதங்களையும் பேணல்

சேக்கிழார் பெருமான் அமைச்சராக அமர்ந்ததும் கிராமம் சகல துறைகளிலும் சிறப்புற்றோங்கியது. சைவ சமயக் கோவில்கள் எல்லாம் சிறப்புற வழிவகைகள் எடுத்தார். பெளத்த விகாரத்தையும் சமணப் பள்ளிகளையும் நல்ல நிலையில் நடந்துவர ஏற்பாடுகள் செய்து வைத்தார். இவைகளைக் கண்ட சோழராசன் "உத்தம சோழப் பல்லவராயர்" என்னும் சிறப்புப்பட்டத்தை வழங்கி இவரைக் கெளரவித்தான்.

### அரசன் வினு

அநபாய சோழன் அவைப் புலவர் பலருடனிருந்து தமிழ் நூல்கள் படித் தின்புறுவது வழக்கம். ஒருநாள் சமண காவியமாகிய சீவக சிந்தாமணி படித்து மகிழும்போது அந்தப் பேரவையிலிருந்த சேக்கிழார் பெருமான் 'சிந்தாமணி சிறந்த காவியமே. அது சீவகன் என்னும் அரசனுடைய வரலாற்றைக் கூறுவது. இதனிலும் பார்க்கச் சைவ சமயத்துக்கு அரும்பாடுபட்ட அறுபத்து மூவர் வரலாறுகளைப் படிப்பதோ கேட்பதோ பேரின்பம் பயப்பதாகும்" என்றனர். இதைக்கேட்ட அரசன் ஐயன்மீர் நாயன்மார்கள் வரலாறுகள் விரிந்த முறையில் கூறக் கூடுமா? என வினவினன். அதற்குச் சேக்கிழார் பெருமான் அறுபத்துமூன்று நாயனர் சரித்திரங்களையும் முறைப்படுத்திக் குறிப்புகளுடன் வைத்திருந்தமையால் அரசன் கேள்விக்கு இசைந்தார், தில்லையம்பலமே திருத்தொண்டர் காவியம் பாடச் சிறந்த இடமெனத் தெரிந்தெடுக்கப் பட்டது.

### "உலகெலாம்"

அரசன் கட்டளையை நிறைவேற்றுவதற்குச் சென்ற சேக்கிழார் எல்லாம் வல்ல இறைவன் தில்லை நடராசன் முன்னின்று "தேவரீர் முதல் அடியெடுத்துத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தார். அப்போது "உலகெலாம்" என்ற தொடர் சேக்கிழார் செவியிற் பட்டது. உடனே

'உலகெ லாமுணர்ந்
தோதற் கரியவன்
நிலவு லாவிய
நீர்மலி வேணியன்
அலகில் சோதியன்
அம்பலத்தாடுவான்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# ஈழத்தமிழர் அறப்போ[ர்]

——0——

### உலகத் தமிழ் மக்களின் ஆதரவு

ஈழ நாட்டில் தமிழ் மக்கள் தொடங்கி யிருக்கும் அறப்போர்பற்றி "தமிழ் நாடு" வைகாசி 27ம் நாள் (9-6-56 இதழில் தெளிவான உள்ளக் கிடக்கை ஒன்று வெளிவந்திருக்கின்றது. உற்சாகம் ஊட்டும் உறுதி மொழியாக அது அமைகின்றது. ஈழ நாட்டுக்கு வெளியே யுள்ள தமிழ் மக்களின் கருத்தைத் தெரியச் செய்வதொன்ருகலின் அதன் ஒரு சிறு பகுதியை இங்கே த[...]ரேம்:

"இலங்கையைப்பே[...] சிறு நாடாகிய சுவி[...] லாந்தில், நான்குமொ[...] ஆட்சி மொழிகளாக [...] குகின்றன. செர்மன், [...] ஞ்சு, இத்தாலி[...] உரோமான்சு ஆகிய [...] நான்கு மொழியாளர்[...] ஒற்றுமையுடன் வா[...] ற்கு இதுவே கார[...] மக்களாட்சி முறை[...] சிறந்த எடுத்துக் காட்[...] விளங்கும் சுவிட்சர்லா[...] இலங்கை அரசினர் [...] ந்து கவனிக்கும்படிவே[...] கின்றேம; கவனித்[...] இலக்கைத் தீவின் ந[...] கம். வளர்ச்சி, செல்[...] பண்பு முதலியவற்[...] அடிகோலிய தமிழ்ப் [...] மக்களின் தாய்மொழி[...] அவர்கள் புறக்கணிய[...] அதற்குரிய சமத்[...] நிலையை அளிப்ப[...] ளென்று எதிர் பார்[...] கூடும். அந் நிலை வ[...] வரையில், தமிழர்கள[...] அறப் போர் நடை[...] வேண்டும். இலங்கைத்[...] ழர்களின் இயக்கத்திற்கு [...] கத் தமிழர்களின் ஆ[...] பெருவாரியாகக் கிடைக்[...] என்ற உறுதியுடன் அவர்[...] தமிழ்ப் பெரும் போரில் [...] பட்டு வெற்றியுற வே[...] மென்று பெரிதும் விரும்பு[...] ரேம்"

### மொழிபற்றி மேற்சேவையிலுள்ளோர் தீர்மானம்

இராச்சியவிவகார மேற்சேவையிலுள்ளோர் (சிவில் சேவிஸ்) சிங்கள மொழி படிக்க இயன்றளவு முயல்வதாகவும் தங்கள் முயற்சி சித்தியடையாவிட்டால் சேவை நட்டப் பணத்துடன் தாங்கள் அரசாங்க சேவையிலிருந்து நீங்க அரசாங்கம் இடங் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளார்களாம். இச் சேவையிலுள்ள 151பேருள் பன்னிருவர் மாத்திரம் சிங்கள மொழியிற் சேவை செய்ய இயலுமென்றும் தெரிவித்துள்ளார்களாம். இச்சேவையிலுள்ளோருள் 102 பேர் சிங்கள மக்களாவர்.


# கம்பராமாயணம்

( யுத்தகாண்டம் )

**கும்பகருணன் வதைப்படலம்**

( ஒன்று முதல் 170 பாட்டுக்கள் )

------ யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வெளியீடு ------

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனர் அவர்கள்** எழுதிய
**விளக்கவுரையுடன் விரைவில் வெளி வரும்.**

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

**இத்துடன்,**

**170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனுல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.**

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.

# சைவக் காவியம் தந்த தெய்வச் சேக்கிழார்

———————0———————

3ம் பக்கத் தொடர்ச்சி

மலர்சி லம்படி
வாழ்த்தி வணங்குவாம்"

என்ற கடவுள் வாழ்த்ப் பாவுடன் தொடங்கி ாள்தோறும் அத்திருப் ணியைக் கவனிக்கலானர். ாவிய முறைக் கேற்பச் ந்தரர் வரலாற்றையே தலாகக் கொண்டு ஓரா ்டு காலத்தில் மாபெரும் ாவியமாகிய பெரியபுரா த்தைப் பாடி முடித்த ர்.

## அரங்கேற்றம்

பெருங்காவியம்பாடுதற்கு ஆரம்பித்த தில்லையம்பலத் லேயே அரங்கேற்று வைபமும் அரசன் பேரவை ன் சிறப்புற நடந்தேறி து. பல நிகழ்ச்சிகளை ம் கேட்டு அரசன் றும்பூதெய்தினன். பல ாருகச் சேக்கிழார் பெரு ானைக் கௌரவித்தான் ான தருமங்களைச் செய் ான். காவியம் செய்து வியரசரையும் நூலையும் ானை மீது எழுந்தருளச் செய்து மலர்மாலைகள் அணிவித்து திருக்கோவில் தி வலம் வரச்செய்தான். பெரியபுராணம் 12-ம் திரு முறையாக வகுக்கப்பெற் து.

## ?-ம் முறை ட்டம் வழங்கல்

அப்பொழுது அநபாய சோழன் "தொண்டர் சீர் பரவுவார்" என்னும் பட் ்த்தை அளித்து மகிழ்ந்த ன். இதன் பிறகு சேக் கிழார் பெருமானை அமைச் சர் பதவியிலிருந்து ஓய்வு பெறச்செய்து தில்லையம் பலத்திலே சிலகாலம் வீற் றிருக்கச் செய்தனன். சேக்கிழார் வைகாசி மாதம் பூச நட்சத்திரத்தில் முத்தி படைந்தனர்.

## பெரியபுராணப் பெருமை

சேக்கிழார் பல்லவர் காலத்தில் வாழ்ந்த (கி பி. 300-900) நாயன்மார் வரலாறுகளைத் தக்க சான்றுகள் கொண்டு கூறிச் சென்றமையால் அவரது காவியம் வரலாற்றுச் சிறப்பு உடையதாயிற்று. இன்றுள்ள நாம் வேறு எவ்வகையாலும் அறிய முடியாத அக்காலச் செய்திகள் பலவற்றைப் பெரிய புராணத்தால் அறிகின்றோமென்றால் மிகையாகாது. ஆகவே சேக்கிழார் பெருமான் தமிழ்ப் புலவர் குழுவில் இணையற்றவர் என்று சொல்வதே பொருந்தும். இன்று சிலர் பெரியபுராணத்தைக் கொழுத்த வேண்டும் என்று கூக்குரலிட்டுப் போர் தொடுக்கின்றனர். இவர்கள் காட்டும் நியாயங்களோ மிகவும் விசித்திரமானவை. பெரிய புராணத்தைப் புரட்டிக் கூடப்பார்க்காமல், ஆராயாமல் அவதூறு சொல்ல முற்படுவது முட்டாள் தனமாகும். பெரியபுராண ஆசிரியர் ஒரு வகுப்புவாதி யல்லர். சாதி வேற்றுமை பராட்டியவருமல்லர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள்

| | |
|---|---|
| பிராமணர் | 14பேர்கள் |
| வேளாளர் | 13 ,, |
| வணிகர் | 6 |
| இடையர், வண்ணார், பரதவர், சாலியர், பாணர், பறையர் முதலியோர் | 30 |
| | 63 |

பிராமண குலத்தில் உதித்த குழந்தை சம்பந்தர் வேளாளர் குலத்துதித்த வயதில் முதிர்ந்த நாவுக்கரசரை "அப்பரே" என்றழைத்ததும், பிராமணராகிய அப்பூதியடிகள் நாவுக்கரசருடன் பந்தியில் இருந்து உணவு உண்டதும், சிவப்பிராமண குலத்தவரான சுந்தரர் உருத்திர கணிகையரான பரவையாரையும் வேளாளப் பெண்மணியாகிய சங்கிலியாரையும் மணந்ததும், அக்காலச் சிவனடியார்கள் சாதி வேற்றுமைபாராட்டவில்லையென்பதற்குப் பெரியபுராணம் கூறுவது தக்க சான்றுகளாகும். இதனுல் சைவ சமயத்தில் வகுப்பு வாதம் பாராட்டப்படவில்லையென்பது புலனுகின்றது.

பெண்மையைப் போற்றியவரும் சேக்கிழார் சுவாமிகளே. திலகவதியார் காரைக்காலம்மையார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், வெண்காட்டு நங்கை முதலிய அநேக நங்கையர் திலகங்களை யெல்லாம் திறப்படத் தமது காவியத்தில் அமைத்துப் பெண் குலத்தைப் பெருமைப்படுத்தியவரும் சேக்கிழார் சுவாமிகளே. இந்த மாதரசிகளின் ஒத்துழைப்பு இல்லாதிருந்தால்நாயன்மார்கள் சமயத் திருப்பணிகள் செய்திருக்க முடியாதல்லவா?

பெரியபுராணத்தைத் தமிழிற்பாடிய சேக்கிழார் அதை விடுத்து வேறொரு மொழியில் செய்திருக்கலாமே. ஏன் அவர் தமிழிற் பாடவேண்டும்? தமிழரசன் கேட்டதற்கிணங்கத் தமிழ் நாட்டு நாயன்மார்களைப் பற்றித் தமிழிற் பாட வேண்டும்? தமிழரசன் கேட்டதிற்கிணங்கத் தமிழ்நாட்டு நாயன்மார்களைப்பற்றித் தமிழிற் பாடுவதல்லவோ முறை. பெரிய புரபுணம் ஏறக்குறைய 4250 செய்யுள்களைக் கொண்டது. தமிழ் நாட்டில் சைவசமயம் பற்றிச் செய்யப்பெற்ற முதற் காவியம் இதுவேயாகும்: இது மொழி பெயர்ப்பு நூலன்று. நூலாசிரியர் காலத்தில் நடந்த வரலாறுமன்று. தாமே நேரிற் சென்று வரலாறுகளைச் சேகரித்துத் திரட்டித் தந்த பொக்கிஷம். சேக்கிழார் சிறந்த சைவர்; பெரும் புலவர்; செயற்கரிய செய்த செம்மல்; சோழப் பெரு நாட்டின் முதலமைச்சர். ஆதலின் அவரது காவியத்தில் இலக்கிய நயம், வரலாற்று உண்மைகள், சைவ சித்தாந்தச் சிறப்புக்கள் அங்கங்கே மிளிர்வது வெள்ளிடைமலை. "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது" எனவே இப்பெரியாரைப் போற்றுவது நினைவுகூர்வது பொதுவாகத் தமிழ் மக்களதும் சிறப்பாகச் சைவச் சமூகத்தினரதும் கடமையாகும். இவ்வாறு போற்றி வாழ்தலே நாம் ஈடேறுதற்கு வழியுமாகும்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்
# குருபூசை விழா

### காரைநகர்ச் சைவமகா சபையில்

சென்ற 27-5-56 ஞாயிற்றுக்கிழமை திருஞான சம்பந்த சுவாமிகளின் குருபூசை மேற்படிசபை மண்டபத்தில் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. முதலில் வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைதோறும் நடக்கும் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் திரு. இ. நாகலிங்கம் அவர்கள் தலைமை வகிக்க தொண்டர் சைவபூஷணம் திரு. ஆ. வே. அருளம்பலம் அவர்களும், காரைநகர் இந்துக் கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. ஆ. தியாகராசா அவர்களும் சம்பந்த சுவாமிகளைப்பற்றிச்சிறந்த சொற்பொழிவாற்ருர்கள்.

### பதுளை சைவபரிபாலன சங்கத்தில்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசை சென்ற வெள்ளிக்கிழமை (1-6-56) மாலை பதுளை சைவபரிபாலனசங்கத்தினுல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இது சம்பந்தமாகச் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் சரஸ்வதி வித்தியாசாலை மாணவிகளினுல் சம்பந்தர் தேவாரப் போட்டியும் நடத்தப்பட்டன போட்டியில் பங்குபற்றிய மாணவிகளுக்கெல்லாம் ஸ்ரீமான். V. நடராசா அவர்கள் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன. சங்கத்தின் சமயப்பகுதிச்செயலாளர் ஸ்ரீமான் N. சிவகுரு அனைவருக்கும் நன்றியுரை கூறினுர்.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## ஆராய்வின்மையே மூடக் கொள்கை

இவ்வுலகத்திலே இன்பப் பொருள்கள் பல. துன்பப் பொருள்களும் பல. ஒரு மாளிகையைத் தோற்றுவிப்பது அருமை. தோன்றிய அவ் வீட்டுக்குக் குற்றங்கூறுவது எளிமை நமது சைவ சமயம் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து விளங்குவது சைவமுந் தமிழும் அநாதியானவை. தமிழ் மொழிக்கு இலக்கணஞ் செய்யப்பட்ட காலத்தைப் பனனீராயிரம் ஆண்டுகள் என்ருரும், பதினையிரம் ஆண்டுகள் என்பது சரி என்ருரும் பலர். அதற்கென்ன என்ருல், சமணர் முதலானோர் ஓர்கால் தோன்றிச் சமயக் கெடுதி ஆற்றினர் தமிழ்மொழிக்குக் கேடு புரிந்

பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவர ஐயர்

தாரில்லை. இக்காலம் நமது நாடு சுதந்திரம் பெற்றது என்பர். அது ஒரு தந்திரமாக இருக்கின்றமை அதிசயமென்க.

வெண்ணுடர் கீழ்நாடரென்று ஒதுக்கினுலும் மொழிக்கு இடரின்றிப் பட்டமும் பரிசிலும் நல்கினர் என்ருல், பின்வருவார் அந்த அடிச்சுவட்டை, அக்காலச் சட்டத்தை அணுவளவும் ஆராயாது தங்கள் மூடக் கொள்கையை, "முதலையும் மூர்க்கனுங் கொண்டது விடா" என்றபடி எதிலும் பிடிவாதம் உட்சாதிப்பது பின் கேடு சம்பவிக்க ஏதுவாகும். எந்த நாடும் முதலில் பாதுகாக்க வேண்டியது தாந்தாம் பேசும் மொழியையேயாகும் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் இன்மையே பெருங் குறை இதனைப் பூர்த்தி செய்யச் சில பெரியோர் முயல்கின்றனர். சமத்துவ நிலையை யாவது தமிழ்மொழி பெறுவது பிழையாகாதென அறிவாளிகள் கருதினர். 'தான்றிக் காயுள் சனியன் புகுந்தவாறு, தமிழ் தலையெடுக்காது செய்ய ஒரு ஆட்சி வந்துளது. தமிழ்மாட்சியுணர்ந்த தலைவர்கள் சற்று முன்பு விழித்திருந்தால் தக்க பயனிருக்கும். தற்போது கஷ்டம் அதிகம் அனுபவிக்க இருக்கின்றது. தளராது முயறசிப்பது - ஒன்றுபட்டுத் தமிழின் பெருமையை நிலைநாட்டுவது - முதன்மைக் காரியமாகும். மக்கள் நிலையை ஒரு பரம்பொருள் சோதிக்கத் திருவுளம்பற்றி இருக்கலாம். இறைத் தியானத்தை நாங்கள் மறந்து விடக்கூடாது. "இடரினுந் தளரினும் உன் நாமம் மறவேன்' என்று பெரிய பக்த சிரோமணிகள் கூறியுள்ளார்கள். இறையனுர் அகப்பொருள் இருக்கின்றது அதைத் தந்தருளிய இறைவரும் இருக்கின்ருர். கடவுளைக் கண்டவர் யார் என்ற நாஸ்திகவாதம் வேண்டாம். கடவுளையும் சிவ சின்னங்களையும் மக்கள் மன அன்புடன் போற்றுதல் வேண்டும். கங்காளன் பூசிய கவசத திருநீறறைப் பூசுவது மூடத்தனம் என்று ஒரு மனிதர் கூறுவாராஞல் இதை விட்ட மூடமதி வேறுண்டா? சுரமுங் கூனும் களைந்த திருநீற்றுக்குஞ் சட்டமா? நீரும், நெருப்பும் சுவைகண்ட தமிழுக்கும் விலக்கா? பழைய அரிய நூல்களை ஆராய்வதும், உலக நிலை, தமது உயிரின் நிலைமை முதலியவற்றை நன்கு ஆராய்ந்து உண்மை காட்டுவதும, சமயம் மொழி என்ற இவைகளை உயிர்க்கிறுதி வரினும் அஞ்சாது எதிர்த்துப் பாதுகாத்து வெற்றி நாட்டுவதும் நமது கடமையாகும். தமிழ் அன்னை வாழ்க.

— — —

### ஸ்ரீ. மேத்தானந்தவின் பொய்ப்பிரசாரம்

தமிழரசுக்கட்சி அமெரிக்க உதவியுடன் செயலாற்றுகின்றதென்று ஸ்ரீ. மேத்தானந்த சொன்னது முழுதும பிழையென்று ஸ்ரீ எஸ்.ஜே வி செல்வநாயகம அவர்கள் மறுமொழி கூறியிருக்கின்ருராம. 1949-ம் ஆண்டில் உருவான தமிழரசுக் கட்சிமீது 1930-ம், 1931-ம் ஆண்டுகள் தொடக்கம் குற்றஞ் சாட்டுவது ஸ்ரீ. மேத்தானந்தவின் மொழி பொய்ப்பிரசாரமென்பதற்குச் சான்று என்று கருதப்படுகின்றது.

### காரைநகர் சைவமகாசபை வருடாந்தக் கூட்டம்

— — —

சென்ற சனிக்கிழமை (24-5-56 காலை 8 மணியளவில் சபையின் வருடாந்தக் கூட்டம நடபெற்றது. அத்தருணம் சபைத் தலைவர் ஸ்ரீமான் இ. நாகலிங்கம தலைமையில் ஸ்ரீமான ஆ தியாகராசா அவர்கள் "தமிழுக்கும் சம அந்தஸ்துக் கொடுக்க வேண்டும" என்னும் பிரேரணையைப்பிரேரித்தார் பிரேரணை சர்வசம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

அதன்மேல் சபை அங்கத்தவர்களாக,

ஸ்ரீமான் அ. நாகலிங்கம்
,, ச. சுந்தரம்பிள்ளை
,, ஆ ச கதிரவேலு
,, K.K.நடராசா
,, சோ. சின்னத்தம்பி

ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அடுத்த செவ்வாய்க்கிழமை உத்தியோகத்தர்கள் பினவருமாறு தெரிவுசெய்யப் பெற்றனர். தலைவர்: ஸ்ரீமான் இ. நாகலிங்கம் அவர்கள், உப தலைவர்: ஸ்ரீமான் ஆ ச கதிரவேலு அவர்கள், ஸ்ரீமான் M. A. கந்தையா அவர்கள், காரியதரிசிகள்: ஸ்ரீமான் ஆ. நாகலிங்கம்அவர்கள் ஸ்ரீமான் K. R. நடராசா அவர்கள், தனதிகாரி: ஸ்ரீமான் ச சுந்தரம்பிள்ளை அவர்கள்,

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசை

## இடையூறுநீக்கி இன்பம்தரும் நல்வழி

நிகழும் வைகாசி ᏼ 14 உ (27-5-56) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம்சைவ பரிபாலனசபை ஆதரவில் நாவலர் மண்டபத்தில் மேற்படி குருபூசை சிறப்பாக நடைபெற்றது. தமிழ் மறை ஓதல் நால்வர் பூசை மகேசுவரபூசை சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

திருவாளர்: பொன். அப்புக்குட்டி அவர்கள் "ஞான சம்பந்தன் திருமணம்" என்னும் விடயத்தில் பேசினுர். அவர் பேசும்போது "சுப்பிரமணியப் பெருமான் ஞானமே திருவுருவாகவுடையவர். சுப்பிரமணியர் இலட்சணம் கூறும் சிங்கன் "ஞானத்தானுருவாகிய நாயகனியல்பை நானும் நீயுமாயிசைத்த லென்றுல தெளிதோ" என்றுன். உலகில் வேதநூல் ஒழுக்கம் என்ற உண்மையை வாழ்க்கையிலமர்த்திக் காட்டி வேத ஒழுக்கம் நிலவத்துணைநின்று சைவம் வளர்க்க வந்தவர். ஆகாயத்தில் பிரகாசிப்பது சந்திரன். ஞானசம்பந்தச் சந்திரன் ஆகாயத்தில மாத்திரமன்றி பூமியிலும் தண்ணெளி பரப்பி ஆன்மாக்களின் அறிவைப் பிரகாசிக்கச் செய்பவர். அம்மையினும் பெரும் பதவியிலிருந்தவர். பூமியில் இறைவனுணையால் தோற்றினவர். வேதங்கள் தன்மைபடர்க்கையால் இறைவனைப் போற்றும். இவர் முன்னிலைப்படுத்திப் போற்றித் தெய்வ நம்பிக்கையை வாழ்விக்க வந்தவர். சிவபெருமான் கொன்றை மாலையைச் சடையிலணிந்தவர். எனவே அடியார் வழிபாடுகளையேற்று அவர்களுக்கு இகபரவின்பங்களை யள்ளிச் சொரிபவர். மேலும் மேலும் அடியார்கள் இதையுணர்ந்து வழிபாடு செய்துய்ய நாளும் இம் மலர்மாலையை அணிந்துள்ளார். அப்பெருமான் புகழ்களை நாடோறுமுரைத்திடு பொலிவுடையவர். "புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே", போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானுர்" என்ற அருள் வாக்குகள் இங்கே சிந்திக்தற்பாலன. இயலிசை நாடக மென்ற முத் தமிழின் பிரதானமான இசைமூலமாக இறையுணர்ச்சியை எழுப்பும் பண்ணையும் தமிழையும் வாழ்விக்கவந்தவர். அவரை மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனுரும் மனமுருக விழிபெருகக கண்டார்கள். களித்தார்கள். வணங்கினுர்கள்.

இப்பொழுது இலங்கையில் தமிழை விலக்கிவிட வேண்டுமெனப் பெரும்பான்மையோராம் சிங்களவர் பிடிவாதம் செய்வது பேசும் தரத்ததன்று. தமிழ் இனிமையுடையது. தெய்வத் தன்மையுள்ளது. இரக்கவுருவாயுள்ளது. தூய்மையுடையது என்று பலவாருகப்போற்றப்படுவது. 'பண்ணுர்ந்த இன் தமிழாய்ப் பரமான பரஞ்சுடரே" என்கிருர் சுந்தரர். அருணகிரி நாதர். "அருணதன பாத பந்தம் அனு தினமுமே துதிக்க அரிய தமிழ் தானளித்த மயில் வீரா, தெரிந்த வேதம் செந்தமிழ் தெரிதரு புலவோனே" என்கிருர். தமிழ் வேதமாம் தேவார திருவாசகங்களைத் தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியராய் தாழ்வடதாரியராய், நாயகன் சேவடிதை வருசிந்தையராய் நெக்கு நெக்குருகிப் பாய்வது போலன்பு நீர் பொழி கண்களோடு தெருவினும் திண்ணையிலும் வழியிலும் நடையிலும் இரவிலும் பகலிலும் வேண்டிய இசை தாளங்களோடு கூட்டம் கூட்டமாய்ப் பாராயணம் செய்தவோசை முழங்கிக் கொண்டிருந்தால் மற்றெப் பாஷைகளும் இதற்கு நேர்நிற்கமாட்டா. "புத்தரோடு அமணை வாதிலழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே" என்றுர் சம்பந்தர். மேலும் "புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளாச்சித்தத்தவர் கடெளிந்து தேறினவித்தக நீறணிவார் வினைப்பகைக் கத்திரமாவன வஞ்செழுத்துமே"என்ற தேவாரத்தை சம்பந்த சரணுலயர் பாடசம்பந்த யாத்திரையைத் தடுத்து இடையூறுபண்ணிய புத்தர் தலைவர் தலை இடி விழுந்து இடறிப் போயிற்று.

ஞானசம்பந்தர் திருமண விடயமாய் மறையவர் பணிந்து நின்று இறைஞ்சித் தேவரீர் இப் பூமியின்கண் வேத ஒழுக்கத்தை நிலைநாட்ட வந்தமையால் வேதமுறைப்படி திருமணம் செய்யவேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். அவர் அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்தார். திருப்பெருமணத்தில் நம்பியாண்டார் நம்பி என்பவருடைய மகளை வேதமுறைப்படி மண முடித்தார்கள். எல்லாக் கிரியைகளும் நடைபெற்றன. ஓமாக்கினியை வலம் வரும்போது மணமகள் கைப் பிடித்துக் கொண்டு அக்கினி மூர்த்தியானவர் சிவபெருமானே எனக் கருதி இறைவர் திருவடியை மணமகளுடன் சேர்வேனென்று திருக்கோயிலை யடைந்து "நல்லூர்ப் பெருமணம்" என்னும் பாமாலையைச் சாத்தினுர். இக் காலத்தில் கிரியைகளை நிறுத்திக் கோயிலில் அருச்சனையொன்றேடு கலியாணம் செய்யுமொழுக்கம் பரிகசிக்கத் தக்கது.

... ... ... ... .... .... (வளரும்

## அடைவு விற்பனவு விளம்பரம்

—0—0—

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் காரைநகர் வடக்கு வலந்தலை வீ. வேலுப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மீட்கப்படாது இருக்கும் இதன்கீழ் விபரிககப்படும் நகைகள் 1956-ம் ஆ. ஆடிᏼ 9-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| இல | திகதி | கொடுத்த ரூபா | ஊர் பெயர் நகைவிபரம் |
|---|---|---|---|
| 1517 | 26-11-54 | 40 - 00 | காரைநகர் விக்காவில் பொன்னர் குமரேசு மூன்றுசோடி கடுக்கன், காய்முத்து |

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer.

M. 299. 15-6-

### கோட்டு விற்பனவு விளம்பரம்

———

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. வட்டுக்கோட்டை மேற்கு பெருமையினுர் வரதராசாவும்

2. ஷெயூர் பெண் விசாலாட்சியும். — வழக்காளிகள்.

இல. M B/316
எதிராக

1. திருநெல்வேலி சந்தி மருதையினுர் குருசாமி
2. ஷெயூர் பெண் சரசுவதி
3. ஷெயூர் சோமசுந்தரம் பெண் நவமணி
4. ஷெயூர் கதிரித்தம்பி சோமசுந்தரம — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B/316 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஞு ஆனிᏼ 30உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4860/=ம் ரூபா: 4000 =க்கு 23-6-55 தொடக்கம் 13-9-55 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 216/75 சதம்.

#### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலியிறை "துண்டம்பிட்டி" பர. நீ. இல. (2½) இரண்டரை. வீடும் இரு கடைகளும் கிணறும், இதில் மேற்குப் பக்கமாய்ப் பர.நீ.இல. ஒன்றரை (1½) இந்தப் பர.நீ.இல. ஒன்றரையும் (1½) கிழக்குப் பக்கத்தில் இதன் மிகுதியாதனத்தில் இருக்கும் கிணற்றுப் பாகமும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும், இதற்கு எல்லை கிழக்கு முதலாம் எதிரிக்குரிய வாதனம், வடக்கு குமாரசாமிப்பிள்ளை மகள் இராசலட்சுமிக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம். மேற்கு அருணுசலம் நடராசாவின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு ரேட்டு. 1956ம்ஞு வைகாசிᏼ 15ம்திகதி

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M 300 15-6 (து 300)

### வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கக் கேள்வி விளம்பரம்

———

அராலி தெற்கிலுள்ள இலுவானை - கிரா வோலை ரேட்டு வேலைக்கு "எீல்" வைத்த கேள்விப் பத்திரங்கள் 23 - 6 - 1956. சனிக்கிழமை காலை 9மணிவரைக்கும் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

வடபகுதி ஸ்தலஸ்தாபன உதவி அதிபரின் கொந்திருத்துக்காறர்களின் நாமாவளியில் 5,000 ரூபாவுக்கு மேல் பதிவு செய்யப்பட்ட கொந்திருத்துக்காரர்களுக்கு மட்டும் கட்டுப்பணம் ரூபா: 10/= மூலம் 20 - 6 - 56 புதன்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்ட விபரங்களெதுவும் கிராமச்சங்கக் காரியாலயத்தில் அறிந்துகொள்ள வேண்டும்.

க. சுப்பிரமணியம்,
அக்கிராசனர்.

கிராமச்சங்கக்காரியாலயம்
வட்டுக்கோட்டை
9-6-1956.
M 298 15-6-56.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 17—6—56 —— 23—6—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

தனலாபம் இந்தவாரம் நிச்சயம். நண்பர் அதிகம் உதவியாயிருப்பர். சில சிக்கல்களைத் தீர்ப்பதில் சகோதர சகோதரிகள் அதிகம் பிரயோசனமா யிருப்பர். புதன் பிற்பகல் வியாழன்வெள்ளி கவனமாய்க்கழிக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

ஒருநல்லவாரம். பணத்துறையில நீர் அதிகம் இலாபம் அடையக்கூடியதாயிருக்கும். இனத்தவர்கள் அதிக உதவியா யிருப்பர். பகைவர் அழிவுக்குமிடமுண்டு. வெள்ளி பிற்பகலும் சனியும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

நீர் சித்தியடைதற்கு இந்த வாரம் மிக முயன்று உழைக்க வேண்டும். நண்பர் அதிக உதவியாயிருப்பர். பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபம் உண்டாக்கக்கூடும். மனச் சமாதானமிருக்கமாட்டாது.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

இந்தவாரம் தனலாபம் நிச்சயம். மேலதிகாரிகளிடமிருந்து நன்மைகளுக்குமிடமுண்டு. இனத்தவர்களுடன் சண்டைகளுக்குமிடமுண்டு ஆனுல் அவை ஆபத்தானவையாயிருக்கமாட்டா, வாரஇறுதியில் காணிப் பொருள்கள்மூலம் இலாபங்கள் நிச்சயம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

இந்தவாரம் தொடக்கம் பணநிலைமைகள் திருந்த வேண்டும் பகைவர் அழிவும் புது முயற்சிகளில் சித்தியும் நிச்சயம், வார இறுதியில் சில குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஒரு நல்லவாரம் சில பிழை எண்ணங்களை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். பகைவர் அழிவும் காத்திராத இலாபமும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தேகசுகம் இந்த வாரம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. உத்தியோகத்துறையில் எல்லாம் நன்று ஆனுல் விசேட கருமங்களில் எந்த ஒரு தீர்மானத்தைச் செய்யவும் நீர் வருத்தப்படுவீர்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம். கேட்டை.

நடைமுறை அலுவல்களில் இந்தவாரம் சில மாற்றங்களுக்கிடமுண்டு. செலவதிகரிக்கும். இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கும் மனச்சலனத்துக்கும் இடமுண்டு. வார இறுதியில் இனத்தவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

குடும்பக் கருமங்கள் இந்த வாரம் தொடர்ந்து தளப்பமகவே இருக்கும் வாழ்க்கை துணைவருடன் சண்டைகளுக்கிடமுண்டு. இந்தவாரம் வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாயிருக்கும்,

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் நீர் அதிக நன்மதிப்பைப் பெறுவீர். அதே காலத்தில் அவமானங்களும் பிழை எண்ணங்களும் உண்டாதற்கிடமுண்டு. நீர் சிறிதும் மிச்சம் பண்ண முடியாத போதிலும் பணத்துறையில் நல்லவாரம்.

**கும்பராசி** அவிட்டம் 3. 4ம் பாதம். சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

விசேட கருமங்களில்தீர்மானம் செய்யமாட்டாது இந்தவாரம் நீர் வருத்தப்படுவீர், முதல்நாள் உம்மைச் சிறிது கிலேசுக்கும். பின் அரைவாரம் பணத் துறையில் நல்லதாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

பணத்துறையில்குற்றமில்லாத வாரம், திங்கள் செவ்வாயும் புதன்காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும், வாரமிகுதி புதுக் கருமங்களுக்கு நல்லதாகும், வார இறுதியில் இனத்தவர்களுடன் சில சண்டைகளுக்கிடமுண்டு.

# சுதந்திரத்துக்கு வேண்டுவது உணவுப் பொருள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

மலையாளத்திலிருந்தும், சிங்கள நாட்டிலிருந்தும் தமிழ் நாட்டிற்குப் பணம் வந்தது. சிங்கள நாட்டிற்கு தேயிலைக்கும், இறப்பருக்கும் தேங்காய்க்கும் மின்னறத்திற்கும் அமெரிக்கா ஐரோப்பா அவுஸ்ரேலியா முதலான இடங்களிலிருந்து பணம் வந்தது. சிங்கள மக்கட்கும் தமிழ் மக்கட்கும் பணம் முன்னுள் வந்த விதம் போலில்லாது குறைந்துவிட்டது, தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் நெல் ஒன்றையே நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. இந்த நெல்லை உண்டாக்குவதற்கு ஆறு, குளம், ஏரி வேண்டும். வேண்டியகாலத்தில் மழை வருஷிக்கவேண்டும். இப்பகுதிகளில் பூரணமாய்த் தண்ணீர்ப் பாய்ச்சலுக்குரிய வசதியுமில்லை. மழையும் காலத்திற்குப் பெய்வதுமில்லை. சில சமயம் அகால மழை பெய்கிறது. இப்படியான நிலையில் தமிழ் மக்களாயுள்ள நாம் இருககின்றோம். எங்கள் உணவிற்கு நாம் சீனுவிலும் பர்மாவிலுமிருந்து அரிசியை வருவித்துக் கோடிக் கணக்கான ரூபா அனுப்பி சாப்பிடுகின்றோம். ஒருநாட்டின் பூரண சுயராச்சியம் பெறுவதற்கு முதல் உணவும் உடையும் அந்த நாட்டில் விருத்தியடையவேண்டும். அதன் பின்னர்தான் அரசியல் விடுதலை. எந்த எந்தப் பூமியில் என்ன என்ன பயிர் பலிதமாய் உண்டாகுமோ அதை அதை வைத்து உண்டாக்கவேண்டும். யாழ்ப்பாண மக்கள் தென்னையை வைத்து உண்டாக்கவேண்டும். தென்னை மரங்களெல்லாம் தென் இலங்கையில் தான் ஏராளம். தென்னந் தோட்டங்களின் சொந்தக்காரர்கள் பிறதேசங்களுடன், கொப்பரு, தேங்காய் தேங்காய் நெய் அனுப்ப ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்கள். ஆனதாற்றுன் தேங்காயும் தேங்காய் எண்ணெய்யும் நாலு ஐந்து வருட காலமாய் விலை ஏறியது. மக்கள் தொகையும் பெருகி, சாப்பாட்டுப் பொருளும் பிற தேசங்கட்கு அனுப்பப்பட்டால் உள்ளூர் வாசிகட்குத் தின்பண்டங் கிடையாதே. ஆனதால் சாப்பாட்டிற்கு வேண்டிய பொருள்களை அவசியம் வைத்து உண்டாக்கவேண்டும். வன்னிப் பகுதியில் ஏராளமான நிலம் சாகுபடி செய்ய இருக்கின்றது. தமிழ் மக்கள் நல்லாய்க் கமஞ் செய்யலாம். துணுக்காயில் 60000 ஏக்கர் நிலம், அரசாங்கம் படித்த பிள்ளைகட்கும் மற்றவர்கட்கும் தலைக்கு ஐந்து (5) ஏககர் வீதம் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. அப்படியான நிலத்தைப் பெற்றுக் கமஞ் செய்ய வேண்டும். கமச் செய்கையையும் விருத்தி செய்து கால்நடைகளையும் பெருக்கி தமிழ் நாட்டில் பாலுந் தேனும் ஓடும்படி செய்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கும்படியும் சுபீட்ச வாழ்வு வாழும்படியும் வேண்டுகின்றேன்.

## அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொழும்புமா நகரிலே தமிழ்மக்கள் வியாபார நிலையங்களை வழமைபோல உரிமையுடன் நடத்துவதற்குத் தடையாக உள்ளவர்கள் குறும்பர்கள் கொள்ளைக் கூட்டத்தார் என்று கூறிவிட்டாற் போதுமா?


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறாப்பர்.


## அரசாங்கமேற்சபை

அரசாங்க மேற்சபையை இல்லாமற் செய்யும்படி மஸ்கேலியாப் பிரதிநிதி ஸ்ரீ சூரிய சேன ஜினதாச பிரதிநிதிகள் சபையில் பிரேரணை ஒன்றுக்கு முன்அறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்.




# தஞ்சை வாணன் கோவை
## சொக்கப்ப நாவலர் உரை

பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சைவாணன் கோவைக்குப் பேர் பெற்ற பழைய உரையாகிய குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்பநாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பின்னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பால பண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பால பண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பரீட்சை, அண்ணுமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆதியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் பயன்படக்கூடியது. நாற்கவிராஜ நம்பியகப்பொருளுரையில் இக்கோவைச் செய்யுள் முழுவதும் உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ்விலக்கணங் கற்போருக்கும் பெரிதும் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞராற் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருத்துக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன் தரத் தக்கது என்பது இதன் முதற்பதிப்பினுல் அறியக் கூடிய தொன்றுகும்.

இப் புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

விலை ரூபா : 6 - 00. வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 15-6-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தமிழ் மறைக் கழகம்
## அகில இலங்கைத் திருக்குறட் டேர்வு 1957
## விண்ணப்பங்கள் 1-1-57 க்குள்

1957 பங்குனி (மார்ச்சு) மீ 16 இல் 40 இடங்களில் தேர்வு நடத்தப்படும். தொடக்கப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளுண்டு. 1-1-47க்குப் பின் பிறந்தவர்கள் தொடக்கப் பிரிவுக்கும், 1-1-42க்குப் பின் பிறந்தவர்கள் கீழ்ப் பிரிவுக்கும், 1-1-36க்குப் பின் பிறந்தவர்கள் மத்திய பிரிவுக்குந் தோற்றலாம். மேற்பிரிவுக்கு வயதுக் கட்டுப்பாடில்லை.

**திருக்குறட் பாடப்பகுதிகள்**

தொடக்கப்பிரிவுக்கு முதற் பதினைந்து அதிகாரங்கள். கீழ்ப்பிரிவுக்கு அறத்துப்பால், மத்திய பிரிவிற்கு அறத்துப் பாலும் பொருட்பாலும், மேற்பிரிவுக்குத் திருக்குறள் முழுவதும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டிடங்களைப் பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள், மூன்றும் நாலாம் இடங்களைப் பெறுபவர்களுக்கும், வயது மிகக் குறைந்த வருக்கும் வெள்ளிப் பதக்கங்கள். ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பிரிவிலும முதலாவதாகத்தேறுபவர்களுக்கு நூற்பரிசில், தொகையாக மாணக்கர்களை அனுப்பும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் உள. போதிய திறமை காட்டுபவர்கள் யாவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விபரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு எழுதுக.

செயலாளர் தமிழ்மறைக் கழகம், 18/2 அத்திடியாவீதி இரத்துமலானை என்று மேற்படி கழகத்தார் அறியத்தருகின்றனர்.

## இளம் உழவர் கழகம்
### நாரந்தனை

வைகாசி மாதம் 23 திகதி (5-6-56) செவ்வாய்க்கிழமை நாரந்தனை இளம் உழவர் கழக அங்கத்தவர்கள் யாவரும் அன்று முழுவதும் உண்ணு விரதமிருந்து மாலை 6 மணிக்கு "தான்தோன்றி ஈஸ்வரி" கோயிலில் விசேஷ பிரார்த்தனை நடத்தித் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென கடவுளை வேண்டிக் கொண்டனர். அதன் பின் பிற இடங்களில் உள்ளவர்களுடன் வைக்கும் தொடர்பைத் தமிழ் மொழியிலே வைக்க வேண்டும் எந்தவிதமான கடிதங்களையும் தமிழிலே எழுதவேண்டும் என்னும் வேண்டுதல் ஒன்று விடுத்தனர்.

## விலைக்கிருக்கின்றது

ஏறக்குறைய பத்து அந்தர் ஈயம் (பழைய அச்செழுத்து) விலைக்கிருக்கின்றது. விற்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

வண்ணார்பண்ணை சைவப்பிரகாச அச்சு யந்திரசாலையில் பார்வையிடலாம்.

மிகக் கூடிய கேள்வியாயிருந்தபோதும் எந்த ஒரு கேள்வியையும் ஏற்கவேண்டுமென்னும் கட்டுப்பாடு அச்சகத்தாருக்கு இல்லை.